08.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு பெரும் பயனளிக்கும் இயற்கை பூச்சிவிரட்டி...

**திருச்சி:** நெற்பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த இயற்கை பூச்சிவிரட்டியை பயன்படுத்தலாம் என்று முன்னோடி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து இந்த முறையைக் கண்டறிந்துள்ள மூத்த விவசாயி ஸ்ரீதர் கூறியது: 100 மில்லி வேப்பெண்ணெய், ஒரு லிட்டர் கோமியம், 10 வில்லை கற்பூரம் ஆகியவைதான் மூலப்பொருள்கள். வேப்பெண்ணெய்யை தண்ணீரில் கரையும் நிலைக்கு கொண்டு வந்த பின்னர், சோப்பு கரைசல் வேப்பெண்ணெய்யுடன் கலந்தால் அடுத்த நிலைக்கு அவை வரும். கற்பூரம் தண்ணீரில் கரையாது என்பதால் கரும்பு கழிவுப் பாகில் இருந்து தயாரிக்கப்படும் எத்தனால் கொண்டும் கரைக்கலாம்.

நெற்பயிரில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். கத்திரி பயிரில் தண்டு துளைப்பான், காய்துளைப்பான் ஆகியவற்றையும், மல்பரி, பப்பாளியில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் தன்மைக் கொண்டதாகும்.

நெற்பயிரில் குருத்துப் பூச்சி, இலை சுருட்டுப் பூச்சி ஆகியவற்றை வெகுவாகக் கட்டுப்படுத்தும் தன்மைக் கொண்டதால் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும். பருத்திப் பயிரில் அனைத்துவகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் தன்மை உடையது இந்த இயற்கை பூச்சி, வெங்காயத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் நுனிகருகல் நோய்க்கு ஒரு தடவை இயற்கை பூச்சி விரட்டியைப் பயன்படுத்தினால், அறுவடை வரை நோய் பாதிப்பு இருக்காது. வெண்டை மற்றும் உளுந்து பயிர்களில் மஞ்சள் வைரஸ் நோய் முற்றிலும் கட்டுப்படுத்தும் தன்மை இந்த இயற்கை பூச்சிவிரட்டிக்கு உள்ளது.

வேர்க்கடலை பயிரில் தொடக்கம் முதலே தெளிக்கும்போது பூச்சிகள் தாக்குதலே இருக்காது. எலுமிச்சை மரங்களில் அனைத்து பூச்சிகளும் கட்டுப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக பூக்கள் வருடம் முழுவதும் தொடர்ந்து காய்க்கும் அனைத்து பூக்களின் சாதுபடிக்கும், பயிர்களில் பூச்சிகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படுகிறது என்றார் அவர்.

## காட்டுப் பன்றிகளிடமிருந்து விளை பயிர்களைக் காக்கும் வழிமுறைகள்

**தருமபுரி:** தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் காட்டுப் பன்றிகளினால் விளை நிலங்கள் அதிக அளவு சேதமடைகின்றன. இதனால் விவசாயிகள் இழப்பைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மாவட்டத்தில், குறிப்பாக பாலக்கோடு வேளாண் கோட்டத்தில் அத்தூர்னஅள்ளி, சிரியனஅள்ளி, சீராண்டபுரம், கரகூர், பெல்ரம்பட்டி, பெல்லுஅள்ளி, கருகுட்டனூர், சீங்காடு, மண்சட்டுப்பள்ளி, திருமல்வாடி உள்ளிட்ட வனப்பகுதியையொட்டி உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளினால் தாக்கம் அதிக அளவு உள்ளது. காட்டுப் பன்றிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி பயிர்களைக் காக்க, பாலக்கோடு வேளாண் உதவி இயக்குநர் (பொ) மு.இளங்கோவன், வேளாண் அலுவலர் வி.குணசேகரன் ஆகியோர் கூறும் வழிமுறைகள்:

தருமபுரி மாவட்டத்தில், வேளாண் விளைச்சல் குறைய பல்வேறு காரணிகள் இருந்தாலும், வனவிலங்குகளின் தாக்குதலால் அதிக அளவு சேதமடைகின்றன. குறிப்பாக, காட்டுப் பன்றிகளின் தாக்குதலால் அதிகப் பயிர் சேதமடைகிறது. காட்டுப் பன்றிகள் வேர்கள், கிழங்குகள், பூச்சிகள், பாம்புகள் மற்றும் சிறு விலங்குகள் என அனைத்தையும் உண்ணும். பொதுவாக, 15 முதல் 30 எண்ணிக்கை அளவில் காட்டுப் பன்றிகள் குழுவாகச் செல்லும் திறன் கொண்டவை. இவை, காட்டில் உள்ள இயற்கையான உணவைக் காட்டிலும், நெல், சோளம், மக்காச் சோளம், பயறு வகைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை அதிக அளவில் நாடுகின்றன. இவை, உண்பதைக் காட்டிலும், சேதம் செய்வதே அதிகமாகும். பொதுவாக, மாலை மற்றும் விடியற்காலை வேளைகளில் இவை வெளியே செல்லும். இவற்றுக்கு கண் பார்வை சற்றுக் குறைவு, ஆனால், நுகர்வுத் திறன் அதிகம். இதனால் பயிர்களை வெகு தொலைவிலேயே கண்டறிந்து விடுகின்றன.

காட்டுப் பன்றிகள் இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் பட்டியல் 3-இல் இருப்பதால், இவற்றின் உயிருக்கு ஆபத்து விளைவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது.

எனவே, இவற்றை தாக்காமல், அவற்றிடமிருந்து பயிர்களைக் காக்க விவசாயிகள் நடவடிக்கை மேற்கொள்ளாலாம்.

முள்கம்பி வேலி அமைத்தல்: வயலைச் சுற்றி முள் கம்பி வேலி நிலத்திலிருந்து ஓர் அடி உயரத்தில் ஒரு கம்பியும், மேலும், ஒவ்வோர் அடி தொலைவில் ஒரு கம்பியுமாக மொத்தம் மூன்று கம்பிகள் அமைத்து கட்டுப்படுத்தலாம். சுருள் கம்பி வேலி: சுருள் கம்பி வேலியும் ஓர் அடி தொலைவு இடைவெளியில் அமைக்கலாம். இதில், உள்ள கூரான முனைகள் காட்டுப் பன்றிகளை அச்சம்கொள்ளச் செய்யும். சில சமயம் மாட்டிக் கொண்டு, அவை எச்சரிக்கை ஒலி எழுப்பும். இதனால் மற்ற பன்றிகள் வராமல் இருக்கும்.

கம்பி வலை வேலி: மண்ணிலிருந்து 3 அடி உயரம் கம்பி வலை வேலி எழுப்பினால், பயிருக்குப் பாதுகாப்பாக இருக்கும். இந்த வகை வேலிகள் பயிரிலிருந்து ஓர் அடி தொலைவு தள்ளி அமைக்க வேண்டும். சூரிய மின் வேலிகள்: மிகவும் விலை உயர்ந்த பயிராக இருந்தால், இந்த வகை வேலிகளை அமைக்கலாம். இந்த மின் வேலியில் 12 வோல்ட் மின்சாரம் எப்போதும் பாய்ந்து கொண்டே இருக்கும். இதனால், வயலுக்குள் பன்றிகள் நுழையும்போது, வேலியில் சிக்கி அதிர்வு உண்டாகும். அதிர்வில் சிக்கும் பன்றிகள் எழுப்பும் ஒலியால், மற்ற பன்றிகள் நிலத்துக்குள் வராது. கால்வாய் அமைக்கல்: விவசாய நிலமும் காடும் சேரும் இடக்கில் விவசாயிகள் இரண்டு அடி அகலம் ஒன்றரை அடி ஆழமும் கொண்ட கால்வாய் அமைக்கலாம். பன்றிகளின் கால்கள் குட்டையாக இருப்பதால், இக் கால்வாய்களை தாண்டி உள்ளே வர முடியாது.

வரப்பில் ஆமணக்கு: வரப்பினைச் சுற்றி 4 வரி ஆமணக்கு பயிரிடும்போது, இதன் வாசம் மற்ற பயிரின் வாசத்தை மறைத்துவிடும். ஆமணக்கில் அதிக அளவு ஆல்காய்டுகள் இருப்பதாலும், அவை சுவையின்றி இருப்பதாலும், காட்டுப் பன்றிகளுக்குப் பிடிக்காது.

ரசாயன முறை: போராட் அல்லது திம்மட் குருணை மருந்து 200 கிராம் 1 கிலோ மணலுடன் கலந்து சிறு துளைகள் இடப்பட்ட பாலிதீன் கவரில் கட்டி, காட்டுப் பன்றிகள் வரும் திசையில் 3 மீட்டர் தொலைவுக்கு ஒன்று என்ற அளவில் குச்சியில் கட்டி ஒரு மீட்டர் உயரத்தில் தொங்கவிடலாம். இந்த மருந்தில் வரும் துர்நாற்றம் பயிரின் வாசனையை முற்றிலும் மறைத்து விடுவதால், பன்றிகள் எளிதில் பயிரை கண்டுபிடிக்க முடியாது.

காட்டுப் பன்றிகள் மூக்கின் மூலம் நுகர்ந்து சென்றே பயிர்களையும் வழித்தடத்தினையும் கண்டறிகிறது.

எனவே, வயலைச் சுற்றி முடி திருத்தகத்தில் கிடைக்கும் மனித தலைமுடியினைப் பரப்புவது மற்றும் பழைய கிழிந்த வண்ணப் புடவைகளைக் கட்டுவதன் மூலம் மனித நடமாட்டம் இருப்பதாகக் கருதி காட்டுப் பன்றிகள் வருவதில்லை. மேலும், காட்டுப் பன்றிகளின் இயற்கை எதிரிகளான புலி, சிறுத்தை, ஓநாய் ஆகியவற்றின் ஒலிப் பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட அளவில் கலந்து ஒலிக்கலவையினை எழுப்பும் நவீன கருவிகளை வைத்தும் பன்றிகள் வராமல் தடுக்கலாம்.

எனவே, விவசாயிகள் இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றி காட்டுப் பன்றிகளின் தாக்குதலில் இருந்து விளைநிலங்களைக் காத்து மகசூல் இழப்பைத் தடுத்து லாபம் ஈட்டலாம் என்றனர்.

## நேரடி நெல் விதைப்பு முறையில் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள்

**திருச்சி:** மேட்டூரில் தண்ணீர் திறக்கப்படாத நிலையில், காவிரி டெல்டா பாசனப் பகுதிகளிலுள்ள நன்செய் நிலங்களில் நெல் சாகுபடிக்கு தயார் செய்து நாற்று நடுவதற்குப் பதிலாக, நன்செய் புழுதியில் நேரடி நெல் விதைப்பு செய்து சம்பா சாகுபடியை மேற்கொள்ளலாம் என வேளாண் துறை அறிவித்துள்ளது. இதுகுறித்து திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இரா.சந்திரசேகரன் கூறியது:

ஆற்று நீர்வரத்து காலதாமதம் ஆகும் காலத்திலும் எதிர்பார்த்த பருவமழை கிடைக்காத தருணத்திலும் வயலை புழுதியாக தயார் செய்து, நெல் விதைகளை நேரடியாக விதைப்பு செய்து பின்னர் ஆற்றுப்பாசனத்தில் நீர்வரத்து கிடைத்தவுடன் சேற்று நெல்லாக மாற்றி சாகுபடி செய்ய வேண்டும். வயலைத் தயார் செய்வதற்கு கோடை உழவு அவசியம். மழை பெய்த பின்னர் 2

அல்லது 3 முறை நிலத்தை உழுது புழுதியாக்கி கொள்ள வேண்டும். கடைசி உழவினை ரோட்டவேட்டர் கொண்டு உழுது பின்னர் நேரடி விதைப்பு செய்ய வேண்டும். நன்கு உழுவதினால் நீர்பிடிக்கும் தன்மை அதிகரிக்கிறது. மண் பக்குவப்பட்டு களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. பூச்சிகளின் கூண்டுபுழுக்கள், நோய்களின் வித்துக்கள் அழிக்கப்படுகின்றன. மண் இறுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ள இடங்களில் ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு கடைசி உழவு செய்யப்பட வேண்டும்.

செப்டம்பர் 15-ம் தேதி வரை விதைப்பு செய்வதற்கு மத்திய கால ரகங்களான ஏடிடீ, கோ 43, கோஆர் 50, டிஆர்ஒய்-3 ஆகியவற்றையும், செப்டம்பர் 20-ம் தேதிக்குப் பிறகு குறுகியகால ரகங்களான ஏடிடீ 36, ஏடிடீ 45 ஆகியவற்றையும் பயன்படுத்தலாம்.

நேரடி நெல் விதைப்பிற்கு ஒரு ஏக்கருக்கு 40 கிலோ சான்று பெற்ற விதைகள் தேவைப்படும். விதைகளை ஒரு சதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலில் (ஒரு லிட்டர் தண்ணீரில் 10 கிராம் பொட்டாஷ் என்ற அளவில் கலந்து) 10-12 மணி நேரம் ஊறவைத்து பின் நிழலில் உலர்த்த வேண்டும். விதைப்பதற்கு முன்பாக பொதுவாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா 200 கிராம் மற்றும் எதிர் உயிர் பாக்டீரியா சூடோமோனாஸ் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

விதைப்பு: நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கி கொண்டு விதை நேர்த்தி செய்த விதைகளை கைதெளிப்பாகவோ அல்லது விதைக்கும் கருவியை கொண்டு ஒரு அங்குல ஆழத்தில் விதைக்கலாம். நெல் விதைகளை விதைக்கும் கருவி கொண்டு விதைப்பதால் தகுந்த பயிர் இடைவெளியும் பயிர் எண்ணிக்கையும் பராமரிக்கப்படுகிறது.

பின்செய் நேர்த்தி: வயலில் முதல் மழை வந்தவுடன் 4 பொட்டலம் அசோஸ்பைரில்லம் (800 கிராம்), 4 பொட்டலம் பாஸ்போபாக்டீரியா (800 கிட்ரம்) ஆகியவற்றை 20 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து வயலில் இட வேண்டும் வயலில் நன்கு ஈரம் உள்ள சமயத்தில் பயிர் களைவதும் பயிர் இல்லாத இடங்களில் பாடு நிரப்பலும் விதை முளைத்த 14 முதல் 21 நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும். வறட்சியான சமயங்களில் நீரின் தேவையை குறைக்க 1 சத பொட்டாஷ் கரைசலைத் தெளிக்க வேண்டும்.

களை மேலாண்மை: முதல் களை பயிர் முளைத்த 15 முதல் 21 நாட்களிலும் இரண்டாவது களை 30-45 நாட்களிலும் எடுக்க வேண்டும். தேவையான களைக்கொல்லி மருந்துகளைப் பயன்படு0த்திட வேண்டும்.

உர மேலாண்மை: விதைப்பதற்கு முன்பு கடைசி உழவில் ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரத்தை இட வேண்டும் அல்லது ஏக்கருக்கு 300 கிலோ மக்கிய தொழு உரத்துடன் நெல்லுக்கு பரிந்துரை செய்யப்படும் 20 கிலோ மணிச்சத்தினை 125 கிலோ சூப்பர் பாஸ்பேட் வடிவில் தொழு உரத்துடன் கலந்து நிழலான இடத்தில் போதிய நீர் தெளித்து ஒரு மாத காலத்தில் ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றி அடியுரமாக இட வேண்டும். நேரடி விதைப்பு செய்து புழுதிக்கால் நெல்லுக்கு ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ சாம்பல் சத்தும், 110 கிலோ யூரியாவும், 35 கிலோ பொட்டாஷ் உரமும் பரிந்துரைக்கப்படுகின்றன. நீர் மேலாண்மை: ஆற்று நீர் வரத்தினை பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பாசனமும் 2 அங்குல ஆழம் நீர் இருந்தால் போதுமானது.இவ்வாறு செய்தால் சம்பாவில் சாகுபடியை அதிக விளைச்சலுடன் பெறலாம் என்றார் அவர்.

## மரபணு மாற்றப் பயிர்களால் இந்தியாவின் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்: அமெரிக்கா

**கொல்கத்தா:** பாரம்பரிய முறையிலான பயிர்ச் சாகுபடியிலிருந்து மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்ச் சாகுபடி முறைக்கு இந்தியா மாறினால் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்திய விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி, கம்பு, சோளம், அரிசி, பருப்பு வகைககள், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். இவற்றை அறுவடை செய்வதற்கு பயிர்களின் முதிர்ச்சிக் காலத்துக்கு தக்கவாறு விவசாயிகள் காத்திருக்க வேண்டும். இதனிடையே, அளவுக்கு அதிகமான மழை, வெயில், வெள்ளம் போன்றவற்றால் பயிர் சேதம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் உண்டாகிறது. இதனால் வெளிநாடுகளில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.

இந்த முறையிலான பயிர்களை இந்தியாவில் புகுத்துவதற்கு மிகப் பெரிய விவாதமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறை பேராசிரியராக பணியாற்றும் ஜூலியன் ஆடம்ஸ் இந்தியா வந்துள்ளார். அவர் மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவுப் பற்றாக்குறைக்கு எதிராகப் போராடுவதற்கு, வரும் 2050-ஆம் ஆண்டில் உலக நாடுகள் உணவு உற்பத்தியை 60 சதவீதமாக அதிகரிக்க வேண்டும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை சாகுபடி செய்தால் இந்தியா உள்பட அனைத்து நாடுகளின் உணவு உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். மேலும் மக்கள்தொகை அதிகரிப்பு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகிய பிரச்னைகளுக்கு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களால் தீர்வு கிடைக்கும். மரபணு மாற்றத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, வெள்ளம், வறட்சி, வெப்பம் போன்றவற்றை தாங்கிக் கொள்ளக் கூடிய வகைகளில் விதைகளின் மரபணுக்களை விஞ்ஞானிகளால் மாற்ற முடியும்.

பாரம்பரிய முறையிலிருந்து மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்ச் சாகுபடிக்கு மாறுவதால், பல்லுயிர்த்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இதுபோன்ற பயிர் முறைக்கு மாறாமல் பாரம்பரிய முறையில் பயிர்ச் சாகுபடி செய்தால், உலகம் முழுவதும் 21 கோடி ஹெக்டேர் விளை நிலங்கள் தேவைப்படக் கூடும் என்றார் அவர்.

## மானிய விலையில் வேளாண் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் மானிய விலையில் வேளாண் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார் ஆட்சியர் இல. நிர்மல்ராஜ். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: முதல்வர் ஜெயலலிதா பேரவையில் 110 விதியின்கீழ் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ், பல்வேறு வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாங்க நிகழாண்டில் ரூ.31 மானியம் வழங்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி இத்திட்டத்தின்கீழ் நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், பவா் டில்லா், சுழற் கலப்பை, குழிதோண்டும் கருவி, விசை களையெடுக்கும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, விசை

தெளிப்பான்கள், தென்னை மரம் ஏறும் கருவி, நேரடி நெல் விதைப்புக் கருவி போன்ற கருவிகளும் மற்றும் டிராக்டாŕ மற்றும் பவாŕ டில்லாŕ ஆகியவற்றால் இயக்கப்படும் இதர வேளாண்மைக் கருவிகளும், இயந்தரங் களும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சிறு, குறு ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சகவீகம் வரையும் இகர விவசாயிகளுக்கு 40 சகவிகிகம் வரையும் அல்லகு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அகிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வேளாண் பொறி யியல் துறையால் ஒப்புகல் மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட்ட உற்பக்தி நிறுவனங்களிடமி ருந்து தங்களின் முழு விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து மானிய உதவியுடன் வாங்கி பயனடையலாம்.

திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் மாவட்ட செயற்பொறியாளாŕ (வேளாண்மைப் பொறியியல்) அல்லது சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளாŕ (வேளாண்பொறியியல்) அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து 2 மார்பளவு புகைப்படம், ஆதார் அட்டையின் நகல், சிட்டா அடங்கல் நகல், புல வரைப்பட நகல், சிறு, குறு விவசாயிகளுக்கான சான்று, சாதிச்சான்றின் நகல், டிராக்டாŕல் இயங்க கூடிய கருவிகளாக இருப்பின் டிராக்டாŕன் பதிவு சான்றின் நகல் ஆகியவற்றை விண்ணப்பக்துடன் இணைக்கு சமாŕப்பிக்க வேண்டும். இவ்விபரங்கள் வேளாண் பொறியியல் துறையின் முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறையின் அனுமதி கடிதம் கிடைத்தவுடன் தேர்வு செய்த கருவிகள் வேளாண் இயந்திரம் ஆகியவற்றிற்குரிய முழுத் தொகையையும், விவசாயிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு கேட்பு வரைவோலை மூலமாக வழங்க வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள் கருவிகளை விவசாயிகள் பெற்ற பிறகு அதனை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலாŕகள் உறுதி செய்து அதற்குரிய முழு மானியத் தொகையும் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்துவார்கள்.

விவசாயிகள் வேளாண் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இத்திட்டதிற்கென திருவாரூர் மாவட்டத்துக்கு நிகழாண்டு ரூ.1.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## பருவ மழை பொய்த்தது: நெல்லை மாவட்டத்தில் வறண்டு வரும் அணைகள்!

**திருநெல்வேலி:** பருவ மழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் குறைந்த கொள்ளளவை கொண்ட கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்குப்பச்சையாறு அணைகள் வறண்டு வருகின்றன.

நிகழ் கார் பருவத்தில் தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 16 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. 2015 இல் 20 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு தென்மேற்கு பருவ மழை கை கொடுக்காததால் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது.

வளமையான மழை அளவைவிட இப்பருவத்தில் 27 சதவீதம் மழை குறைந்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் 36.10 அடி கொள்ளளவு கொண்ட குண்டாறு அணை மட்டுமே நிரம்பியது. பிரதான அணைகளான பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் 100 அடியை கூட நெருங்கவில்லை. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாபநாசம் அணையின் மூலம் 86,107 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகிறது. மழை குறைந்ததால் அணைகளில் இருந்து சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் திறக்கப்படாத நிலையில் சாகுபடி பரப்பு 20 சதவீதம் குறைந்துள்ளது.

இதனிடையே வடக்குப்பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு அணைகள் வறண்டு வருகின்றன. புதன்கிழமை நிலவரப்படி, 50 அடி கொள்ளளவு கொண்ட வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் 9.25 அடியாகவும், 52.50 அடி கொள்ளளவுள்ள

கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 14.50 அடியாகவும், 23 கொள்ளளவு கொண்ட நம்பியாறு அணையின் நீர்மட்டம் 10.76 அடியாகவும் இருந்தது.

இந்த அணைகளுக்கு போதிய நீர்வரத்து இல்லாததால், பாசனத்துக்கு அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடவில்லை. இதனால் அப்பகுதியில் குளங்களிலிருந்து கிடைத்த நீரை கொண்டு நெல் நடவு செய்யப்பட்டது. தொடர்ந்து தண்ணீர் கிடைக்காத சூழலில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் கருகின.

பிற அணைகளில்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 43.75 அடி, சேர்வலாறு அணை நீர்மட்டம் 57.72 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 57.62 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 29.12 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் 24.77 அடி, கடனாநதி அணையின் நீர்மட்டம் 43.30 அடி, ராமநதி அணையின் நீர்மட்டம் 42.75 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 299.76 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 9 கனஅடி, கடனாநதி அணைக்கு 32 கனஅடி, ராமநதி அணைக்கு 18 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 5 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. குடிநீர், பாசனத் தேவைக்கு பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து 804.75 கனஅடி, மணிமுத்தாறு அணையில் பெருங்கால் பாசனத்துக்கு 45 கனஅடி, கடனாநதி அணையில் 45 கனஅடி, ராமநதி அணையில் 30 கனஅடி, அடவிநயினார் அணையில் இருந்து 20 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாட்டுக்கோழி பண்ணை அமைக்க 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நாட்டுக்கோழி பண்ணை அமைக்க, தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது' என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாடு அரசு கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கோழி அபிவிருத்தி திட்டத்தினை 25 கோடி ரூபாய் செலவில் 2016-17ம் ஆண்டுக்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள், தனிநபர் தொழில் முனைவோர், சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட உள்ளனர். கோழிப்பண்ணை அமைக்க, போதிய நிலம் விண்ணப்பதாரர் பெயரிலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களும், கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ள விவசாயிகளும் இத்திடத்தின் கீழ் பயன்பெறலாம். பயனாளிகள் தங்கள் சொந்த முதலீட்டில் அல்லது வங்கி மூலம் கடன் பெற்று இத்திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைக்கலாம். இதில், கோழி கொட்டகை கட்டும் பணி, உபகரணங்கள், தீவனம், குஞ்சுகள் வாங்குதல், அசோலா உற்பத்தி போன்றவை அமைக்க ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் முன் மானியம் தமிழக அரசு வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில், மூன்று நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள், வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுடன் விண்ணப்பங்களை, அந்தந்த பகுதி கால்நடை மருந்தக கால்நடை உதவி

மருத்துவரிடம், வரும், 15ம் தேதிக்குள் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பயறுவகை சாகுபடி விழிப்புணர்வு முகாம்

அந்தியூர்: அந்தியூர், கூச்சிக்கல்லூர், ஈசப்பாறை கிராமங்களில் நேற்று பயறுவகை சாகுபடி விழிப்புணர்வு முகாம் நடந்தது. முகாமில், அந்தியூர் வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன், பயறு வகைகளான துவரை, உளுந்து, பாசிப்பயறு மற்றும் தட்டை சாகுபடி செய்வதன் அவசியத்தையும், பலன்களையும் எடுத்துக் கூறினார். மேலும், சாகுபடி செய்ய வேண்டிய பருவம், ரகங்கள், உள்ளிட்ட தொழில் நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் தமிழரசு பயறு வகைப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்தும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் விளக்கினார்.

## கொப்பு வாய்க்கால் பராமரிப்பு பணி

கோபி: கவுந்தப்பாடி அருகே, கொப்பு வாய்க்காலில் பராமரிப்பு பணி நடக்கிறது. கொடிவேரி அணைக்கட்டு திட்டம், டி-16 முறைநீர் பாசன சபைக்கு உட்பட்ட, புதுக்கரைத்திட்டு பகுதியில் எண் 409 என்ற மதகு உள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு மேல் கட்டப்பட்ட மதகின் மூலம், 22 ஏக்கர் பாசனம் பெறுகிறது. கான்கிரீட் கொப்பு வாய்க்காலின் அடிப்பகுதி, பக்கவாட்டில் சேதம் ஏற்பட்டு, கடைமடை பகுதிக்கு சீரான நீர் கிடைக்கவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து மதகு சங்க நிர்வாகிகள், பாசனசபை பங்களிப்பு மற்றும் விவசாயிகளின் நிதி, 80 ஆயிரம் ரூபாய் செலவில் பராமரிப்பு பணி நடக்கிறது. இதை நிர்வாகிகள் நேற்று பார்வையிட்டனர்.

## விதை அறிந்து பயிர் செய்தால் லாபம் மலை காய்கறி விவசாயிகளுக்கு அறிவுரை

ஊட்டி : 'நீலகிரி விவசாயிகள், மலைக்காய்கறி விதைகளின் தரத்தை அறிந்து பயிர்செய்ய வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊட்டி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யா ஜெயசுதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நீலகிரியில் விளையும் மலை காய்கறிகளின் முளைப்புத்தன்மை மற்றும் புறத்துாய்மை, சரியான விகிதத்தில் இருக்கும் பட்சத்தில், அதிக மகசூல் பெற முடியும்.

விதையை அளிக்கும் விவசாயிகளுக்கு, பரிசோதனை முடிவுகள், ஏழு நாட்களில், அவர்களின் முகவரிக்கும் வழங்கப்படும்.

விதை பரிசோதனைக்கான கட்டணமாக, 30 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் விதைப்பரிசோதனை செய்து பயிர் செய்ய முன்வரவேண்டும்.
இவ்வாறு லாவண்யா ஜெயசுதா கூறியுள்ளார்.

விவசாய சங்க தலைவர் போஜன் கூறுகையில், "நீலகிரியின் பல்வேறு பகுதிகளிலும், தனியார் கடைகளில், தரமற்ற விதைகள் விற்கப்பட வாய்ப்புள்ளது என்பதால், அந்த விதைகளை வாங்கும் விவசாயிகள் இழப்பை சந்திக்க நேரிடும்.

இதனால், தோட்ட கலைத்துறை உள்ளிட்ட அரசு துறைகளில் இருந்து, விதைகளை பெற்று பயிரிடுவதில் விவசாயிகள் முனைப்புக்காட்டி வருகின்றனர்.

இங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப, விதைகளில் முளைப்புத்திறன் மற்றும் புறத்துாய்மை குறிப்பிட்ட சதவீதத்தில் இருந்தால், அதிக மகசூல் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் விதை பரிசோதனை செய்வது அவசியம்," என்றார்.

## மீண்டும் ஊடுபயிராக உயிர்பெறும் ஏலக்காய் விவசாயம்

தாண்டிக்குடி, தாண்டிக்குடி மலைப்பகுதியில் நறுமணப் பொருளில் முதன்மை வகிக்கும் ஏலக்காய் மீண்டும் உயிர்பெற தொடங்கியுள்ளது.கடந்த நுாறாண்டுகளுக்கு முன் தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் ஏலக்காய் விவசாயம் ஏராளமான ஏக்கர் பரப்பில் சாகுபடியானது. இவ்விவசாயத்திற்கு நிழல் அவசியம் என்ற நிலையில் சோலை மரங்கள் அதிகளவு வளர்க்கப்பட்டது. காபி, ஆரஞ்சு, மிளகு, மலைவாழை சகிதம் இருந்த மலைப்பகுதியில் குறுவிவசாயம் மெல்ல, மெல்ல கால்பதிக்க தொடங்கியது. மேலும் சீதோஷ்ண நிலை மாற்றம், ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப ஆலோசனை இல்லாத நிலை என இவ்விவசாய பரப்பு சுருங்க தொடங்கி சிறுவிவசாயம் மேலோங்கியது. இதையடுத்து மரங்கள் குறைந்ததால் பசுமை போர்வை குறைந்து மலைவளம்

பாதித்தது. தடியன்குடிசையில் செயல்பட்ட ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம் செயல்படாமல் முடங்கியது.

தற்போது தாண்டிக்குடிபகுதியில் ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம் மீண்டும் செயல்பட துவங்கியது.இதையடுத்து விவசாயிகள் மீண்டும் ஏலக்காய் நாற்றுகளை நடவு செய்து பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நறுமணப் பொருள்களின் அரசன் அழைக்கப்படும் ஏலக்காய் மீண்டும் மலைப்பகுதியில் ஊடுபயிராக உயிர்பெற துவங்கியுள்ளது.

இது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆராய்ச்சி நிலையத்தினர் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி விவசாயிகளை
ஊக்கப்படுத்த வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3,091 கனஅடியில் இருந்து 7,095 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 76.74 கனஅடியாகவும், நீர் இருப்பு 38-.75 டி.எம்.சியாகவும் உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,250 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

## ரெட்டிப்பட்டியில் கால்நடை பாதுகாப்பு : திட்ட முகாம்

இளம்பிள்ளை: இளம்பிள்ளை அருகே உள்ள ரெட்டிப்பட்டியில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் 1000க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே உள்ள ரெட்டிப்பட்டியில், தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகப்பு திட்ட முகாம்

நடந்தது. சேலம் மண்டல துணை இயக்குனர் தீவன அபிவிருத்தி மருத்துவர் செங்கோட்டையன் தலைமை வகித்தார். இம்முகாமில் பெருமாகவுண்டன்பட்டி கால்நடை மருந்தகம் மருத்துவர் முகமது ஜில்பர் அலி, மருத்துவர்கள் பரணிதரன், வாசுதேவன் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.இந்த முகாமில் கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல் செய்தல், தடுப்பூசி போடுதல், சினைப் பரிசோதனை செய்தல், குடற்புழு நீக்க மருந்து கொடுத்தல், ஆண்மை நீக்கம் செய்தல், கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்பட்டன. ேமலும், முகாமில் 1000 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டன. இந்த முகாமில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த கால்நடை வளர்ப்போர், பொதுமக்கள் தங்களின் கால்நடைகளை அழைத்து பயனடைந்தனர்.

## கொங்கணாபுரத்தில் சொட்டுநீர் பாசன முகாம்

இடைப்பாடி: இடைப்பாடி அருகே கொங்கணாபுரம் ஒன்றிய அலுவலகத்தில் வேளாண்மை துறை சார்பில், விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் குறித்த விளக்க கண்காட்சி மற்றும் ஊக்கத்தொகை வழங்கும் விழா நடைபெற்றது. வேளாண்மை துறை துணை இயக்குனர் குணசேகரன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் அசோக், இணை இயக்குனர் சுந்தர், மாவட்ட கவுன்சிலர் ராஜேந்திரன், கவுன்சிலர்கள் ராஜா, ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியக்குழு தலைவர் கரட்டூர் மணி கண்காட்சியை திறந்துவைத்து, தொழில்நுட்ப பயிற்சி முகாமில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## புதன்சந்தையில் ஆடுகள் விலை உயர்வு

சேந்தமங்கலம், : நாமக்கல் மாவட்டம் புதன்சந்தையில், நேற்று ஆடுகள் விலை உயர்ந்தது.

நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற சந்தையாகும். இங்கு செவ்வாய்கிழமை மாட்டுச்சந்தையும், புதன்கிழமை ஆட்டுச்சந்தையும்

கூடுகிறது. சுற்றுப்பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடாக்கள் விற்பனைக்கு வரும்.

இதனை வாங்க நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் வருவார்கள். நேற்று கூடிய சந்தையில் சுற்றுப்பகுதியிலிருந்து அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. வரத்து அதிகரித்துள்ள நிலையில், பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு ஆடுகளின் விலை உயர்ந்தது.

நேற்று கூடிய சந்தையில் 10 கிலோ எடை கொண்ட இறைச்சி ஆடு □3,500க்கு விற்பனையானது. வளர்ப்பு ஆடுகள் □3,600க்கு விற்றது. பிறந்து ஒரு மாதமே ஆன பெண்குட்டி ஆடு மற்றும் கிடாக்குட்டி □600க்கும் விற்பனையானது.

## மீன், இறால் வளர்ப்பு பயிற்சி முகாம்

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் மற்றும் இறால் வளர்ப்பு மற்றும் தீவன மேலாண்மை குறித்த பயிற்சி வரும் 16ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய திட்ட தலைவர் டாக்டர் அகிலா வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 16ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு மீன் மற்றும் இறாலுக்கான தீவன மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இம்முகாமில் மீன் மற்றும் இறால் வளர்ப்பு முறைகள் மற்றும் அவற்றுக்கான தீவன மேலாண்மை குறித்து விரிவாக கற்றுத்தரப்படும். இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வரும் 15ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## தேன்கனிக்கோட்டையில், இயற்கை முறையில் மா சாகுபடி பயிற்சி

தேன்கனிக்கோட்டை: தேன்கனிக்கோட்டையில், இயற்கை முறையில் மா சாகுபடி பயிற்சி வழங்கப்பட்டது. தளி தோட்டகலை துறை சார்பில், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கிழ், இயற்கை முறையில் மா சாபகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது. தளி வட்டார தோட்டகலை உதவி இயக்குநர் சிதம்பரநாதன் தலைமை தாங்கினார். இதில் தேன்கனிக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு இயற்கை உரங்களை பயன்படுத்தி மா சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மண்புழு உரம் தயாரித்தல், பூச்சி விரட்டி ஆகியவற்றை குறித்து விளக்கப்பட்டது. மூன்று நாட்கள் நடைபெற்ற பயிற்சியில் பயூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக விஞ்ஞானிகள், தோட்டகலை உயர் அதிகாரிகள், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும் பண்ணை குடில்கள், பசுமைக்குடில்களில் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி விளக்கப்பட்டது.

நரசய்யர் குளத்தில் புதர்கள் அகற்றும் பணி தொடங்கியது : தூர்வாரவும் நடவடிக்கை

தர்மபுரி: தினகரன் செய்தி எதிரொலியாக, தர்மபுரி நகராட்சி நரசய்யர் குளத்தை சுற்றி வளர்ந்த புதர்களை அகற்றும்பணி தீவிரமாக நடந்தது. விரைவில் குளத்ைத தூர்வார உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தர்மபுரி நகராட்சி 17வது வார்டு கந்தசாமி வாத்தியார் தெருவில் நரசய்யர் குளம் உள்ளது. இந்த குளம் தூர்வாராமல் கிடப்பில் இருந்தது. பல மாதங்களாக தண்ணீர் தேங்கி நின்றதால், தண்ணீர் மாசடைந்து பச்சை நிறத்தில் மாறி, தொற்றுநோய் அபாயம் நிலவியது. ேமலும் கொசுக்கள் உற்பத்தி கேந்திரமாக மாறியிருந்தது. குளத்தை சுற்றி செடிகள் வளர்ந்து புதர் மண்டிக்கிடந்தது. இதனால் அப்பகுதி மக்கள் கடும் அவதிப்பட்டனர். இந்த குளத்தை தூர்வாரி, முறையாக பராமரித்தால், சுற்றுவட்டார பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயரும், மழைக்காலத்தில் அதிக அளவு மழைநீர் தேங்கும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்த செய்தி, தினகரன் நாளிதழில் படத்துடன் வெளியானது. இதன்

எதிரொலியாக நேற்று, நகராட்சி நிர்வாகம் சார்பில் நரசய்யர் குளத்தை சுற்றி இருந்த புதர்களை, பொக்லைன் மூலம் அகற்றும் பணி நடந்தது. அடுத்த கட்டமாக நரசய்யர் குளம் தூர்வாரப்பட்டு, மாசடைந்த தண்ணீர் வெளியேற்றப்படும் என நகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் கருவி வாடகை மையம் அமைக்க ரூ.1.10 கோடி நிதி

ஈரோடு, : ஈரோடு மாவட்ட வேளாண்மை பொறியியல்துறை சார்பில் வேளாண் இயந்திரமயமாக்குதல் உப இயக்கத்தின் மூலமாக வேளாண் கருவிகள் வாடகை மையம் அமைக்க அரசு சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மையம் மூலமாக டிராக்டர், பவர்டில்லர் போன்ற உழவு கருவிகளும், பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் போன்ற பயிர்களுக்கு தேவையான கருவிகளை மானிய விலையில் வாங்கி விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கலாம்.

இந்த வேளாண் கருவிகள் வாடகை மையத்தினை பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழு, நபார்டு வங்கியால் அமைக்கப்பட்ட வேளாண் குழுக்கள், முன்னோடி விவசாயிகள், தனிப்பட்ட தொழில் முனைவோர் ஏற்று நடத்தலாம். ஒவ்வொரு வாடகை மையமும் 25 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கவும், அதில் வேளாண் கருவிகளின் விலையில் 40 சதவீதம் அல்லது 10 லட்சம் ரூபாய் இதில் எது குறைவோ அந்த தொகை மானியமாக குழுவிற்கு விடுவிக்கப்படும். மீதமுள்ள 60 சதவீதமான ரூ.15 லட்சத்தை பயனாளிகள் குழுவின் பங்களிப்பாக செலுத்த வேண்டும். ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி, கொடுமுடி, அம்மாபேட்டை, அந்தியூர், கோபி, டி.என்.பாளையம், நம்பியூர், தாளவாடி, சத்தி ஆகிய 11 வட்டாரங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த வாடகை மையம் அமைக்க வேளாண்மை பொறியியல்துறை அலுவலர்களை அணுகி பயன்பெற கலெக்டர் பிரபாகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 2ம் மண்டல பாசனத்துக்கு 11ம் தேதி தண்ணீர் திறப்பு

உடுமலை,: திருமூர்த்தி அணையில் இருந்து கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3.75 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இது 4 மண்டலமாக பிரித்து தண்ணீர் திறக்கப்படுகிறது. முதல் மண்டல பாசனம் கடந்த மார்ச் மாதம் முடிந்தது. ஆகஸ்ட்மாதம் 2ம் மண்டல பாசனம் நடைபெற வேண்டும். ஆனால் பரம்பிக்குளம் அணையில் தண்ணீர் இல்லை. இதனால் அங்கிருந்து திருமூர்த்தி அணைக்கு நீர்வரத்து கேள்விக்குறியாக இருந்தது. இருப்பினும் தென்மேற்கு பருவமழையை நம்பி விவசாயிகள் உள்ளனர். மழை பெய்து செப்டம்பரிலாவது பாசனம் துவங்கும் என விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இந்நிலையில் பரம்பிக்குளம் அணையின் குறைந்த நீர் இருப்பில் இருந்து சர்க்கார்பதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அங்கிருந்து தண்ணீர் கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் திறப்பு மூலம் 12 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த நீர்வரத்து காரணமாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 1010கனஅடியாக இருந்தது. எனவே வருகிற 11ம் தேதி 2ம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்க அரசுக்கு அதிகாரிகள் கருத்துரு அனுப்பி உள்ளனர்.